இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 04-01-2025

# மன்னிப்புக் கேட்கவே 20 மாதங்கள்

2023ஆம் ஆண்டு மே மாதம் எரியத் தொடங்கியது மணிப்பூர் மாநிலம். 20 மாதங்கள் கழித்து அதற்கு மன்னிப்புக் கேட்டு இருக்கிறார் அந்த மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங். இன்னமும் எரிந்து கொண்டுதான் இருக்கிறது மணிப்பூர். அனைத்துக்கும் பொறுப்பேற்று பதவி விலகி இருக்க வேண்டியவர் பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங். இப்போது மன்னிப்பு நாடகத்தை நடத்தி இருக்கிறார்.

**பிரேன் சிங் அளித்துள்ள பட்டியலே பதற வைக்கிறது.**

- **2023 மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை மணிப்பூர் நிலத்தில் 408 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்துள்ளது.**
- **2024 மே மாதம் முதல் டிசம்பர் வரை 112 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்துள்ளது.**
- **காவல் நிலையங்களில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட ஆயுதங்களில் 3,112 ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.**
- **2,511 வெடிபொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.**
- **வன்முறை தொடர்பாக இதுவரை 625 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**
- **12,047 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.**

**- என்று சொல்லி இருக்கிறார் மணிப்பூர் முதலமைச்சர் பிரேன் சிங். இதைச் சொல்வதற்கு அவருக்கு கூச்சமே இல்லை. முகத்தில் கூச்சமே இல்லாமல் அவரால் எப்படி பேட்டி தர முடிந்தது என்றே தெரியவில்லை.**

அவர் பேட்டி கொடுத்த அன்றைய தினம் ஒன்றிய உள்துறை அமைச்சரகம் ஒரு ஆண்டறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த ஆண்டறிக்கையில், "கடந்த 2023 ஆம் ஆண்டில் வடகிழக்கு மாநிலங்களில் நடைபெற்ற மொத்த வன்முறைச் சம்பவங்களில் 77 விழுக்காடு மணிப்பூரில் நடைபெற்றுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. மணிப்பூரில் நடைபெற்ற வன்முறைக்கு எதிராக பாதுகாப்புப்படையினர்மேற்கொண்டநடவடிக்கைகளில்33கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர் என்றும் 184 கிளர்ச்சியாளர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், 80 கிளர்ச்சியாளர்கள் சரண் அடைந்தனர் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

"மாநிலத்தில் இரு சமூகத்தினர் இடையே ஏற்பட்ட மோதலுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அனைத்துச் சமூகத்தினரும் ஒருவரையொருவர் மன்னித்து கடந்த காலத் தவறுகளை மறக்க வேண்டும்" என்று சொல்லி இருக்கிறார் மணிப்பூர் முதலமைச்சர் பிரேன் சிங். கடந்த காலத் தவறுகளை இரண்டு சமூகத்தவரும் மறக்க வேண்டும் என்று சொல்கிறாரா, நடந்த சம்பவங்களை மக்கள் மறந்து விட வேண்டும் என்று நினைக்கிறாரா?

எவ்வளவு பேர் இந்த 20 மாதங்களில் கொல்லப்பட்டார்கள் என்பதை பிரேன் சிங் சொல்ல வில்லை. அவரால் சொல்ல முடியவில்லை. 250 பேருக்கு மேல் கொல்லப்பட்டு இருப்பார்கள்.

**குக்கி - மைத்ரி இன மக்களின் மோதலாக இது தொடங்கியது. அந்த இரண்டு மக்களுமே ஆளும் பா.ஜ.க. அரசை நம்பவில்லை. நம்பத் தயாராக இல்லை. மோதல் தொடங்குவதற்கு இரண்டு இன மக்களுக்கு இடையிலான புரிதலின்மையாக இருக்கலாம். ஆனால் மோதல் தொடர்வதற்கு - இன்னும் இன்னும் நடந்து கொண்டிருப்பதற்குக் காரணம் பா.ஜ.க. அரசின் கையாலாகாத தன்மையே ஆகும். யாரையும் அவர்களால் சமாதானப்படுத்த முடியவில்லை.**

மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசால்தான் இது முடியவில்லை என்பதல்ல. ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசாலும் முடியவில்லை. முதலமைச்சர் பிரேன் சிங்கால் அமைதிக்கு வழிவகுக்க முடியவில்லை என்றால் அந்தப் பொறுப்பை ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷா செய்திருக்க முடியாதா? அவர் செய்ய வேண்டாமா? ஒரு மாநிலம் 20 மாதங்களாக எரிகிறது. இந்தத் தலையங்கம் தீட்டப்படும் நாளுக்கு முந்தைய நாள் கூட எரிகிறது.

மணிப்பூரின் காங்போக்பி மாவட்டத்தில் உள்ள சைபோல் கிராமத்தில் குகி - ஜோ சமூகத்தினரின் பதுங்குமிடங்களை பாதுகாப்புப் படையினர் ஆக்கிரமித்து விட்டதாகச் சண்டை ஏற்பட்டது. இதற்கு எதிராக ஏராளமான பெண்கள் இணைந்து போராடி இருக்கிறார்கள். இவர்களைக் கலைக்க பாதுகாப்புப் படையினர் தடியடி நடத்தி இருக்கிறார்கள். கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி இருக்கிறார்கள். இதில் பல பெண்கள் காயம் அடைந்துள்ளனர். 'போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் ஆடைகளைக் கிழித்து பாதுகாப்புப் படையினர் இழிவுபடுத்தினர்' என்று மனித உரிமைகள் அமைப்பு குற்றம் சாட்டி உள்ளது.

விஷ்ணுபுர் மாவட்டத்திலும் பாதுகாப்புப் படையினருக்கும் பெண்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இப்படி 20 மாதங்களாக இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது மணிப்பூர் வன்முறை.

"அந்த இரண்டு பெண்களை ஆயுதம் தாங்கிய ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விரட்டி வந்தார்கள். அந்தப் பெண்கள் இருவரும் தப்பித்து காட்டுக்குள் ஓடினார்கள். சாலையோரத்தில் ஒரு காவல்துறை வாகனம் நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அதற்குள் ஓடி ஒளிந்து கொண்டார்கள். அந்த வாகனத்தில் ஓட்டுநர் இருந்தார். காவல் துறை அதிகாரிகள் இருவர் உள்ளே உட்கார்ந்து இருந்தார்கள். நான்கைந்து காவலர்கள் அந்த வாகனத்துக்கு அருகில் நின்று கொண்டு இருந்தார்கள்.

அந்த இரண்டு பெண்களோடு, ஆண் ஒருவரும் ஓடி வந்தார். தங்களை பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு போய்விடுங்கள் என்று அந்த ஆண், காவலர்களிடம் கெஞ்சினார். ஆனால் காவலர்கள், 'இந்த வாகனத்தில் சாவி இல்லை' என்று சொல்லி விட்டார்கள். அந்தப் பெண்களைக் காப்பாற்ற காவலர்கள் மறுத்துவிட்டனர்.

அதற்குள் கலவரக்காரர்கள் அந்த வாகனத்தைச் சூழ்ந்து விட்டார்கள். உடனடியாக காவலர்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள். வாகனத்துக்குள் இருந்த இரண்டு பெண்களையும் கலவரக்காரர்கள் வெளியில் இழுத்து வந்தார்கள். நிர்வாணப்படுத்தினார்கள். ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். பாலியல் வன்கொடுமை செய்தார்கள்" - என்கிறது சி.பி.ஐ. தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கை. இந்தச் சம்பவம் 2023 மே மாதம் நடந்தது. அப்போதே நடவடிக்கை எடுத்திருந்தால் 20 மாதங்கள் கொடூரம் தொடர்ந்திருக்குமா?

"இது போல பல சம்பவங்கள் நடந்துள்ளது" என்று எகத்தாளமாக அப்போது பேட்டி அளித்தார் மணிப்பூர் முதலமைச்சர் பிரேன் சிங். இப்போது மன்னிப்பு என்று பதுங்குகிறார். இவ்வளவுக்குப் பிறகும் அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கூட தயங்குகிறது பா.ஜ.க. தலைமை. பிரதமர் பதவியில் இருப்பவர் 20 மாதத்தில் ஒரு முறை கூட மணிப்பூர் செல்லவில்லை.

இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.1.2025) வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள நான்காவது சென்னை மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, மரு. நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்கள் – ஓய்வூதியதாரர்கள் – குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு

# பொங்கல் பரிசு வழங்கிட ரூ.163.81 கோடி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜன.4-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2023-2024ஆம் ஆண்டிற்கான 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு மிகை ஊதியம் 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கிட 163.81 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும் நாட்டிற்கே வழிகாட்டக் கூடிய பல முன்னோடி நலத்திட்டங்களை கடைக்கோடித் தமிழருக்கும் கொண்டு சேர்த்திட அயராது உழைத்திடும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 2023-2024ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்கிட 163 கோடியே 81 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவின்படி,

1) 'சி' மற்றும் 'டி' பிரிவைச் (C & D Group) சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 3,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

2) தொகுப்பூதியம், சிறப்புக் கால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள், மற்றும் 2023-2024-ஆம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும்.

3) "சி" மற்றும் "டி" பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கும் ரூபாய் 500 பொங்கல் பரிசாக வழங்கப்படும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### 'செம்மொழிப் பூங்கா'வில் அமைக்கப்பட்டுள்ள

# சென்னையின் - நான்காவது மலர் கண்காட்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன.4-**

**சென்னை, செம்மொழிப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சென்னையின் நான்காவது மலர்க் கண்காட்சியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.1.2025) வேளாண்மை - உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சென்னையின் நான்காவது மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்தார்.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற மலைவாசத்தலங்களில் உள்ள பூங்காக்களில் கோடை விழா நிகழ்ச்சிகள் மற்றும் மலர்க் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்வுகள் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது. இதைப் போன்று, சென்னை மக்களைக் கவரும் வகையில் 2022ஆம் ஆண்டு முதல் சென்னையில் மலர்க் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது, தோட்டக்கலை பயிர்களின் வளத்தையும், வளர்ச்சியையும் பிரதிபலிக்கும் நோக்கில் கடந்த மூன்று மலர்க் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இக்காட்சிகளை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு ரசித்தனர்.

சென்னையில் முதல் மலர்க் கண்காட்சி கலைவாணர் அரங்கில் 3.6.2022 முதல் 5.6.2022 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. இதனை 44,888 பார்வையாளர்கள் கண்டுகளித்தனர்.

செம்மொழி பூங்காவில் 3.6.2023 முதல் 5.6.2023 வரை நடைபெற்ற இரண்டாவது சென்னை மலர்க் கண்காட்சியினை 23,302 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர். இக்காட்சிகளில் பல்வேறு வண்ண அயல்நாட்டு மற்றும் பூர்வீக கொய்மலர்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் காட்சிப்படுத்தப்பட்டன.

மூன்றாவது மலர்க் கண்காட்சி செம்மொழி பூங்காவில் 10.2.2024 முதல் 20.2.2024 வரை 11 நாட்கள் நடைபெற்றது. கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற இம்மலர்க் கண்காட்சியில் முழுவதும் பலவண்ண பூச்செடிகள் மற்றும் அழகுத்தாவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டது. இதனை 1,09,027 பார்வையாளர்கள் கண்டுகளித்தனர்.

தற்போது, நான்காவது சென்னை மலர்க் கண்காட்சி ஜனவரி 2025இல் செம்மொழிப் பூங்காவில் நடைபெறுகிறது. இதில் பெட்டுனியா, சால்வியா, செவ்வந்தி, ரோஜா, பெகோனியா, ஆந்தூரியம், பெண்டாஸ், சாமந்தி, டயாந்தஸ், சினியா, டொரினியா, கேலண்டுலா, கோழிக் கொண்டை, வாடாமல்லி, பான்ஸி, டெல்ஃபினியம், பால்சம், ஹைட்ராஞ்சியா, பாய்ன்செட்டியா, பென்ஸ்டிமான், டேலியா, கல்வாழை, சூரிய காந்தி, வெர்பினா, ஆன்டிரினம், ஜெரேனியம், பென்டாஸ், வயலா, ஜெர்பரா, ஆர்கிட்ஸ், நித்தியகல்யாணி, ப்ரிமுலா, வெட்சி, கேலா லில்லி, ஆஸ்டர், டெய்சி, போன்ற 50க்கும் மேற்பட்ட வண்ண பூச்செடி வகைகளுடன் அலங்கரிக்கப்பட்ட யானை, பட்டாம் பூச்சி, இரயில் பெட்டி, கப்பல் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட வடிவங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும், டிரசினா, பைகஸ், கோலியஸ், அரேலியா, கார்டிலைன், அக்லோனிமா, எராந்திமம், ஃபிலோடென்ட்ரான் போன்ற பல்வேறு அலங்கார இலைத்தாவரங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இச்சிறப்புமிக்க மலர்க் கண்காட்சியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்து, பார்வையிட்டார். பின்னர், பூங்காவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியை பார்வையிட்டார். தொடர்ந்து, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முதலமைச்சர் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இம்மலர்க் கண்காட்சி ஜனவரி 2ஆம் தேதியான நேற்று முன்தினம் தொடங்கி 18.1.2025 வரை நடைபெற உள்ளது. செம்மொழி பூங்காவில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நுழைவுசீட்டு வழங்கப்படும். மேலும் https://tnhorticulture.in/spetickets/ என்ற இணையதளம் வாயிலாகவும் நுழைவுச்சீட்டு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, மரு. நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசின் விருதுகள் பெற்ற

# தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, ஜன. 4-

ஒன்றிய அரசின் விருதுகள் பெற்ற தமிழ்நாட்டு விளையாட்டு, வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு

**தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையின் வளர்ச்சியை உலக அரங்கில் உயர்த்திப் பிடித்த நம் சாதனை வீரர்களுக்கு ஒன்றிய அரசின் விருதுகள் வழங்கப் பட்டிருப்பதில் மகிழ்ச்சி!**

**கேல் ரத்னா விருது பெற்றுள்ள குகேஷ் மற்றும் அர்ச்சுனா விருது பெற்றுள்ள துளசிமதி, நித்யஸ்ரீ, மனிஷா ராமதாஸ் மற்றும் அபய்சிங் ஆகியோருக்கு என் வாழ்த்துகள்! வெற்றிகள் தொடரட்டும்!**

**தமிழ்நாட்டில் இருந்து சாதனை படைப்போரின் எண்ணிக்கை வருங்காலங்களில் உயர்ந்துகொண்டே இருக்க வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.